**கஹவத்த பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 21 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் கஹவத்த பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விரிவான பட்டியல்கள் மற்றும் மீதி உறுதிப்பாடுகள் சமர்ப்பிக்கப்படாததனால் கூட்டுத் தொகை ரூபா 1,778,927 ஆன 02 கணக்கு விடயங்களை திருப்திகரமாக ஆய்வு செய்ய முடியவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும். | சோத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றில் உள்ள தகவல்கள் மாத்தரம் இருக்கின்றன. |

### 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்ப்பு | | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2)இ | 2010 முதல் 2018 வரை 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 65,652 ஆன முற்பணத்தை மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்த்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை | புணம் செலுத்துமாறு கடிதம் மூலம் அறிவூட்டப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 07 வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம எரி பொருள் பாவனையினைப ரிசீலனை செய்ய வேண்டும். | எரி பொருள் பாவனை தொடர்பாக சிறு பழுதுபார்த்தல்கள் செய்யப்பட்டதன் பின்னர் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 5,077,670 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 6,817,312 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 3,370,450 | 3,556,133 | 3,431,231 | 1,625,484 | 3,371,486 | 3,480,614 | 4,095,870 | 1,633,246 |
| (ii) | வாடகை | 8,186,805 | 6,231,484 | 6,124,980 | 794,419 | 8,003,826 | 5,552,976 | 5,521,526 | 686,519 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 932,450 | 1,154,617 | 1,148,867 | - | 475,130 | 919,367 | 925,867 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 9,766,550 | 8,537,062 | 11,805,659 | 11,318,903 | 8,853,754 | 9,621,437 | 5,569,757 | 15,071,950 |

#### 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ)(i) | வீத வரி அறவிட சபை அதிகார எல்லையிலுள்ள அனைத்து அசையா சொத்துக்களும் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதும், 2009 ஆண்டின் பின்னர் சொத்துக்கள் மதிப்பீடு | 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | வீத வரி மீள் மதிப்பீட்டிற்காக இவ்வருடம் ஏப்ரல் மாதம் மதிப்பீட்டு அலுவலர்கள் வருவதாக அறிவித்துள்ளனர். |

செய்யப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் 677 வீத வரி அலகுகளில் ரூபா 1,519,901 ஆன நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், அதில் 05 ஆண்டுகளை விஞ்சி நிலுவையாக காணப்படும் 104 அலகுகளிற்குரிய ரூபா 333,100 உள்ளடங்கியிருந்தது. அந் நிலுவை மீதியை அறவிட சபை போதிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட முறையான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். | ஏதிர் காலத்தில் நடமாடும் சேவை வேலைத் திட்டங்களை நடாத்தி நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் 05 ஆண்டுகளை விஞ்சி நிலுவையாக காணப்படும் கூட்டுத் தொகை ரூபா 56,745 ஆன ஏக்கர் வரியை அறவிட சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட முறையான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். | ஏக்கர் வரி பரிசீலனை ஒன்றை மேற்கொண்டு வருமானம் சேகரிக்க வேலை ஒழுங்கொன்று தயாரிக்கப்படுகிறது. |

**2.2.3 வாடகை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டு தொடர்பாக கடை அறை வாடகை ரூபா 76,100 மற்றும் கஹவத்த வாராந்த சந்தை மீன் தட்டுகளிலிருந்து ரூபா 144,000 அறவிட வேண்டியிருந்தது. | பெறப்பட வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை பணத்தை அறவிட சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற் கொள்ள தேவையான நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளது. |

**2.2.4 அனுமதிப்பத்திர கட்டணம்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | வருடாந்தம் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள நிறுவனங்கள் அறிவூட்டப்பட்ட போதும், அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத நிறுவனங்களிற்கு எதிராக சபை சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே 14 வியாபார நிறுவனங்கள் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாததனால் ரூபா 12,000 வருமானமொன்றை சபை இழந்திருந்தது. | குறித்த கால எல்லை ஒன்றுக்குள் அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத வியாபார நிறுவனங்கள் தொடர்பாக வருமான அலுவலரிடமிருந்தும் மற்றைய அலுவலரிடமிருந்தும் அறிக்கை ஒன்று கோரப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1988 இலக்கம் 56 மற்றும் 2000 இலக்கம் 53 கொண்ட சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இலக்கம் 47 கொண்ட தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் படி சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய 26 நிறுவனங்கள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை பெற்றிருக்காத போதும் சபை அது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக ரூபா 114,400 ஆன வருமானம் ஒன்றை சபை இழந்திருந்ததுடன், சபை அதிகார எல்லையில் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான சபையின் பொறுப்பையும் போதியளவு செய்திருக்கவில்லை. | குறித்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற் கொண்டு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய அனைத்து நிறுவனங்களிற்கும் அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டிம். | 2018 ஆண்டினுள் நிர்வனத்தின் இரண்டு அலுவலர்கள் ஓய்வு பெற்றமை, இன்னும் இரண்டு அலுவலர்கள் பிரசவ விடுமுயில் சென்றமை மற்றும் சுற்றாடல் விடய பொறுப்பு அலுவலர் பாடசாலை ஒன்றிற்கு ஆசிரியராக சென்றமை போன்றவற்றால் இருக்கின்ற ஆளணியினரால் மேற் கொள்ள வேண்டிய கடமைகள் அதிகமானதன் காரணத்தால் இவ் அனுமதிப்பத்திரங்களை வழங்க முடியவில்லை. |

**2.2.5 ஏனைய வருமானங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட அறிவித்தல் பலகை வருமானத்திலிருந்து ரூபா 357,006 மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக 149 அறிவித்தல் பலகைகலிருந்து ரூபா 606,800 தொகை மீளாய்வாண்டு இறுதியிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எழுத்து மூல அறிவூட்டல் செய்யப்பட்டுள்ளதுடன் எதிர் காலத்தில் சதியான ஆய்வொன்றை மேற் கொண்டு குறித்த வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.2.6 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மாகாணசபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியில் சபைக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 5,815,777 ஆனது. 2016 ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 5,949,903 ஆக இனங்காண்டிருந்த | இது தொடர்பாக காணப்படும் பிரச்சிணைகளை தீர்த்துக் கொண்டு நிலுவை வருமானத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் தொடர்பான பட்டியல்களை குறித்த நிறுவனங்களிலிருந்து பெற்று கொள்ளாமை காரணமாக நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் தொடர்பான பெறுமானங்கள் அறிந்து கொள்ளக் கடினமாக உள்ளது. |

போதும், 2017 மற்றும் 2018 ஆண்டுகளிற்காக அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணத்தை இனங்கண்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) ஒதுக்கீடு குறைபயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பௌதீக திட்டங்கள் மற்றும் பாதை அபிவிருத்தி மற்றும் நலன்புரி சேவைகளிற்காக முறையே ரூபா 14,875,000 மற்றும் ரூபா 7,655,000 ஆன மூலதன ஏறபாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும், அது தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட மூலதன செலவுகள் முறையே ரூபா 8,623,370 மற்றும் 400,898 மாத்திரமே ஆனது. அதன் பிரகாரம் மூலதன ஏற்பாடுகளிலிருந்து 60 சதவீதம் அல்லது கூட்டுத் தொகை ரூபா 13,505,732 இனை பயன்படுத்த சபையிற்கு இயலாமலிருந்தது. | பாதீடிற்குட்பட்டதான இலக்குளை அடைந்து கொள்வதற்காக பாதீடிற்குட்பட்டதான மூலதன ஏற்பாடுகளிற்காக பணம் சேர்த்துக் கொள்ள சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். | மூலதன உதவிகள் பெறுமளவில் கிடைக்காததன் காரணமாக ஒதுக்கப்பட்டுள்ள மூலதன ஏறபாடுகளை பயன்படுத்த முடியாமல் உள்ளது. சபை நிதியத்தினால் பல கருத்திட்டங்கள் இது வரையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |

#### (ஆ) கழிவுப் பொருள் முகாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முறையான கழிவுப் பொருள் முகாமை வேலை ஒழுங்கொன்றை செயற்படுத்தியிருக்காததுடன், தற்போது கழிவுப் பொருட்கள் வெளியேற்றப்படும் காணியை சபைக்கு சுவீகரித்துக் கொள்ள இயலாமலிருந்தது. | முறையான கழிவுப் பொருள் முகாமை நிகழ்சித் திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைபடுத்த வேண்டும். | சபையினால் கழிவுப் பொருட்களை வெளியேற்றும் காணித் துண்டை சபைக்கு சுவீகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருப்பதுடன், காணியை சுவீதரித்தன் பின்னர் முறையான கழிவுப் பொருள் முகாமை நிகழ்சித் திட்டமொன்றை நடைமுறைபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. |

(இ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் பற்றி சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கங்களிற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் மீளாய்வாண்டு இறுதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் திட்டங்களை தயாரிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

**3.2 மனித வள முகாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| பதவி அங்கீகரிக்கப்பட்ட திகதி முதல் வெற்றிடமாக காணப்படும் வருமான பரிசோதகர் பதவிக்கு மீளாய்வாண்டு இறுதி வரை அலுவலர் ஒருவரை நியமிக்காததன் காரணமாக சபையின் வருமான சேகரிப்பு பலவீன மட்டத்தில் நிலவியது. | வெற்றிடமாகவுள்ள பதவியிற்கு பொருத்தமான அலுவலர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆளணி தகவல்கள் காலாண்டு அடிப்படையில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்படுவதுடன், இறுதி ஆளணி காலாண்டறிக்கை 2019 மார்ச் 31 திகதி அனுப்பப்பட்டுள்ளது. |

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| சபை அதிகார எல்லையில் காணப்படும் அனுமதியற்ற நிர்மானங்களை இனங்கண்டு அவற்றை அகற்ற அல்லது ஒழுங்கமைக்க சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மானங்களை இனங்காணல், அவற்றை அகற்றுதல் அல்லது ஒழுங்கமைக்க வேலை ஒழுங்கொன்றை செயற்படுத்த வேண்டும். | எமது சபைக்குரியதாக ஒரு தொழிநுட்ப அலுவலர் மாத்திரம் சேவை ஆற்றுவதனால் அதிகார எல்லையில் அனுமதியற்ற நிர்மானங்களை ஒழுங்காக இனங்காணும் பிரச்சினை காணப்படுகிறது. எவ்வாறாயினும் தற்போது இனங்காணப்பட்டுள்ள அனுமதியற்ற நிர்மானங்கள் அன்மையில் நிர்மானிக்கப்படாததுடன் எதிர்காலத்தில் புதிய நிர்மானங்களை இனங்கண்டு அவற்றை சட்டபூர்வமாக்க |

| | | |
|---|---|---|
| | | தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்கள் பதிவிடப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் சபைக்கு சொந்தமாக ரூபா 96,421,105 ஆன நடைமுறையல்லாத சொத்துக்கள் இருந்த போதும் அதற்குரிய சொத்துப் பதிவேடுகள் காலாவது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்பிக்கப்பட வேண்டும். | ஏதிர் காலத்தில் ஆய்வொன்றை மேற் கொண்டு நிலையான சொத்து பதிவேட்டை காலாவது வரையாக்க நடவடிக்கை எடுத்து விரிவான பட்டியலை தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

#### 3.4.2 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 ஆண்டு விபத்திற்கு உள்ளாகி பழுதுபார்ப்பதற்காக ரூபா 73,175 முற்பணம் செலுத்தி 2017 ஆண்டு வேலைத் தளமொன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த டெக்டர் வண்டியை மீளாய்வாண்டு இறுதி வரை பழுதுபார்க்கப்பட்டு இருக்கவில்லை. அவ்வண்டி பாதுகாப்பின்றி வேலைத் தளத்தில் காணப்படுவதாக 2018 திசெம்பர் 31 திகதி மேற் கொள்ளப்பட்ட கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | வாகன பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் வேலைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். | டெக்டர் வண்டிக்கு தேவையான உதிரிப் பாகங்களை சந்தையில் பெற்றுக் கொள்ளல் கடினமாகையால் அதன் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் தாமதித்துள்ளதுடன் தறபோது அதன் உதிரிப் பாகங்கள் பெறப்பட்டு பழுதுபார்த்தல் வேலைகள் மேற் கொள்ளப்படுகின்றன. |
| (ஆ) | பொருத்தமான பழுதுபார்த்தலின் பின்னர் பயன்படுத்த முடியுமென கஹவத்த போக்கு வரத்து சபை பொறியியலாளரினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த கிரயம் ரூபா 1,300,000 பெறுமதியான டபல் டிரம் வைபிரேடர் ரோளர் 2013 ஆண்டு முதல் பழுதுபார்தலின்றி சபை வளவில் காணப்பட்டது. | பழுதுபார்ப்பதற்கோ முறையாக ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | டபல் டிரம் வைபிரேடர் ரோளரை ஏலத்தில் விற்பது பொருத்தம் என பொருட்கள் மெய்மை ஆய்வின் மூலம் பரிந்துரைக்கப்பட்டு ஏலத்தில் விற்க உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பழுதுபார்த்தல் கிரயம் அதிகம் என்பதனால் 03 ஆண்டுகளிற்கு முன்னர் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட ஒரு டெக்டர் மற்றும் 2015 ஆண்டில் மற்றும் அதற்கு முன்னரிலிருந்து பாவனையிலிருந்து அகற்றப்பட்ட டிரக் வண்டியொன்று மற்றும் டேலர் ஒன்றும் முறையாக பராதீனம் செய்ய நடவடிககை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் வேலைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்கள் முறையாக பராதீனம் செய்யப்பட வேண்டும். | கெப் வண்டி மற்றும் ஒரு டிரக்டர் வண்டியை ஏலத்தில் விற்பது பொருத்தம் என பொருட்கள் மெய்மை ஆய்வின் மூலம் பரிந்துரைக்கப்பட்டு ஏலத்தில் விற்க உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படுகின்றது. மற்றைய டிரக்டர் வண்டியை சபையின் நிதி நிலைமை சீராகையில் பழுதுபார்க்க எதிர்பார்கிறேன். |

## 3.5 பெறுகைகள்

### 3.5.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 2,238,371 ஆன பெறுகைகள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. | பெறுகைகள் திட்டமொன்றை எதிர் காலத்தில் தயாரிக்கிறேன். |

### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹல்தொல பாதையின் அழிவுற்ற பக்க மதிலை 06 மீட்டர்களுக்கு நிர்மானிக்க ரூபா 199,609 செலவிடப்பட்டிருந்த போதும் அது நிர்மானிக்கப்பட்டுள்ள தூரம் போதாமை காரணமாக நிறைக்கப்பட்ட மண் பாதையின் பக்கத்து நீரோடையிற்கு கழுவப்பட்டு சென்று கொண்டிருந்தது. | அபிவிருத்தி கருத்திட்டங்களை முறையாக திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். | மேல் குறித்த இடத்தில் நிலவிய பழைய மதில் உடைந்து விழுந்ததன் காரணமாக பாதை கீழே புதைவதனால் வகனங்கள் போக்கு வரத்து செய்ய முடியாத நிலை காணப்பட்டது. அந்த அவசர தேவையின் பிரகாரம் வகனங்களை செலுத்தக் கூடிய வகையில் சபை ஏற்பாட்டின் கீழ் மேல் குறிப்பிட்ட பக்க மதில் அமைக்கப்பட்டது. தற்போது பாதையில் வாகனங்கள் செலுத்தப்படுவதுடன் இவ்வாண்டால் அதன் மீதிப் பகுதியிற்கு ஏற்பாடு ஒதுக்கீடு செய்ய சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுளளது. |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் காரணமாக வருடாந்த பாதீட்டை நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்த சபைக்கு இயலாமலிருந்தது

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 26 செலவின விடயங்களிற்கு வழங்கப்பட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 759,233 ஆன மொத்த ஒதுக்கீடும் மீதியாக இருந்தது. | திட்டமிடலுக்கமைய ஏற்பாடுகளை ஒதுக்கி, ஒதுக்கிய ஏற்பாடுகளை பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். | செலவுகள் மேற்கொள்ள நேரிடும் எனும் எதிர் பார்ப்பில் அச் செலவு விடயத்திற்கு ஏறபாடு ஒதுக்கப்பட்டது. |
| (ஆ) | 09 செலவின விடயங்களிற்கு வழங்கப்பட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 16,628,500 ஆன மொத்த ஒதுக்கீட்டில் 80 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சளவில் மீதியாக இருந்தது. | திட்டமிடலுக்கமைய ஏற்பாடுகளை ஒதுக்கி, ஒதுக்கிய ஏற்பாடுகளை பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். | செலவுகள் மேற்கொள்ள நேரிடும் எனும் எதிர் பார்ப்பில் அச் செலவு விடயத்திற்கு ஏறபாடு ஒதுக்கப்பட்டது. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்த முயற்சி எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டிருப்பதுடன் எதிர் காலத்தில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |